# பெரம்பலூர் மாவட்டம்
# நில அளவை ஆவணங்கள் குறித்த தகவல்கள்
# (ஆரம்ப காலம் முதல் நவம்பர் 2012 வரையில்)

| | | |
|---|---|---|
| 1 | மாவட்டம் உதயம் | அரசாணை எண் 913 (Y3) துறை நாள் 30.09.1995-ன்படி திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து பெரம்பலூர், துறையூர், அரியலூர் மற்றும் உடையார்பாளையம் வட்டங்களை உள்ளடக்கி பெரம்பலூரை தலைமையிடமாகக் கொண்டு திருவள்ளுவர் மாவட்டம் என்ற பெயரில் புதிய மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டது.<br>பின் அரசாணை எண் 656 வருவாய் நாள்:- 29.12.2000 மற்றும் 657 வருவாய் நாள்: 29.12.2000-ன்படி அரியலூர் மற்றும் உடையார்பாளையம் வட்டங்களை உள்ளடக்கி அரியலூரை தலைமையிடமாக கொண்டு அரியலூர் மாவட்டம் எனவும், பெரம்பலூர், வேப்பந்தட்டை மற்றும் குன்னம் வட்டங்களை உள்ளடக்கி பெரம்பலூரை தலைமையிடமாகக் கொண்டு பெரம்பலூர் மாவட்டம் எனவும் பிரிக்கப்பட்டது. அதனை அரசாணை எண் 167 வருவாய் நாள்:- 19.04.2002 மற்றும் அரசாணை எண் 168 வருவாய் நாள்: 19.4.2002-ன்படி மீள ஒருங்கிணைத்து பெரம்பலூரை தலைமையிடமாக கொண்ட ஒரே மாவட்டமாக ஒன்று சேர்க்கப்பட்டது.<br>அரசாணை எண் 683 நாள்: 19.11.2007-ன்படி பெரம்பலூர் மாவட்டம் மறுசீரமைப்பு செய்யப்பட்டு பெரம்பலூர், வேப்பந்தட்டை மற்றும் குன்னம் வட்டங்களை உள்ளடக்கி பெரம்பலூரை தலைமையிடமாக கொண்டு பெரம்பலூர் மாவட்டமும். அரியலூர், செந்துறை மற்றும் உடையார்பாளையம் வட்டங்களை உள்ளடக்கி அரியலூரை தலைமையிடமாக கொண்டு அரியலூர் மாவட்டமும் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. |
| 2. | வட்டங்களின் தோற்றம் | ஒருங்கிணைந்த பெரம்பலூர் வட்டத்தில் அரசாணை எண் 216 வருவாய் (Y3) துறை நாள்: 12.03.1996-ன்படி குன்னத்தினை தலைமையிடமாக கொண்டு குன்னம் வட்டம் எனவும், பெரம்பலூரை தலைமையிடமாக கொண்டு பெரம்பலூர் வட்டம் எனவும் இரண்டாக பிரிக்கப்பட்டு 16.3.96 முதல் செயல்பட்டது. அரசாணை எண் 1392 வருவாய் துறை நாள்:- 27.12.1996-ன்படி பெரம்பலூர் வட்டத்திலிருந்து மீள வேப்பந்தட்டை ஒன்றியத்தினை பிரித்து வேப்பந்தட்டையை தலைமையிடமாக வைத்து வேப்பந்தட்டை வட்டம் பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. |

அரசாணை (நிலை) எண் 410 வருவாய் (வ.நி.-1(1)) துறை நாள்:- 21.11.2012-ன்படி குன்னம் வட்டத்திலிருந்து ஆலத்தூர் ஒன்றியத்தினை பிரித்து ஆலத்தூரை தலைமையிடமாக கொண்டு புதிய ஆலத்தூர் வட்டம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

தற்போது பெரம்பலூர் வட்டத்தில் பெரம்பலூர், வேப்பந்தட்டை, குன்னம் மற்றும் ஆலத்தூர் ஆகிய நான்கு வட்டங்கள் உள்ளன.

## தற்போதுள்ள மாவட்ட நிர்வாக அமைப்பு

மாவட்ட வருவாய் நிர்வாகம்:- வருவாய் கோட்டம் - 1
வருவாய் வட்டங்கள் - 4

மாவட்ட உள்ளாட்சி நிர்வாகம்:- நகராட்சிகள் - 1
ஊராட்சி ஒன்றியங்கள் - 4
பேரூராட்சிகள் - 4

மாவட்ட நிர்வாக அமைப்பு:-

வருவாய் கோட்டம் :- பெரம்பலூர்

வருவாய் வட்டங்கள்:-
1. பெரம்பலூர்
2. வேப்பந்தட்டை
3. குன்னம்
4. ஆலத்தூர்

## மாவட்டநிர்வாக அமைப்பு

| வ. எண் | மாவட்டம் பெயர் | வட்டத்தின் பெயர் | வட்டத்தில் உள்ள நகராட்சிகள் பெயர் | வட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | ஊராட்சிகள் எண்ணிக்கை | வட்டத்தில் உள்ள பேரூராட்சியின் பெயர் | வட்டத்தில் உள்ள குறுவட்டங்கள் பெயர் | குறுவட்டத்தில் உள்ள கிராமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பெரம்பலூர் | பெரம்பலூர் | பெரம்பலூர் | 1. பெரம்பலூர் | 20 | 1 குரும்பலூர் | 1. பெரம்பலூர்<br>2. குரும்பலூர் | 11<br>16<br>27 |
| 2 | பெரம்பலூர் | வேப்பந்தட்டை | -- | 1. வேப்பந்தட்டை | 29 | 1. பூலாம்பாடி<br>2. அரும்பாவூர் | 1. வெங்கலம்<br>2. பசும்பலூர்<br>3. வாலிகண்டபுரம் | 14<br>12<br>13<br>39 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | பெரம்பலூர் | குன்னம் | -- | 1. வேப்பூர் | 39 | 1. லப்பைக்குடிக் காடு | 1. வடக்கலூர்<br>2. கீழப்புலியூர்<br>3. வரகூர் | 15<br>17<br>15<br>47 |
| | | ஆலத்தூர் | | 1. ஆலத்தூர் | 38 | ---- | 1. கூத்தூர்<br>2. செட்டிக்குளம்<br>3.கொளக்கா நத்தம் | 13<br>14<br>12<br>39 |

பெரம்பலூர் மாவட்டத்தில் நில அளவைப்பணி நடைபெற்ற காலங்கள் விபரம்

| வ.எண் | வருவாய் வட்டத்தின் பெயர் | ஆரம்ப நில அளவை நடைபெற்ற ஆண்டு | மறுநில அளவை நடைபெற்ற ஆண்டு | இனாம் ஒழிப்பு சட்டம் 26/48, 30/48-ன்படி நில அளவை நடைபெற்ற ஆண்டு | நில உடைமைபதிவு மேம்பாட்டு திட்ட நில அளவை நடைபெற்ற ஆண்டு | நத்தம் நில அளவை நடைபெற்ற ஆண்டு |
|---|---|---|---|---|---|---|
| 1 | பெரம்பலூர் | 1898-ம் ஆண்டு | 1922 முதல் 1927 வரை | 1962 முதல் 1964 வரை | 1986 முதல் 1987 வரை | 1990 முதல் 1996 வரை |
| 2 | வேப்பந்தட்டை | ஒருங்கிணைந்த பெரம்பலூர் வட்டத்திலேயே நில அளவைப்பணிகள் முடிக்கப்பட்டது. | | | | |
| 3 | குன்னம் | | | | | |
| 4. | ஆலத்தூர் | | | | | |

நில அளவை தொடர்பான ஆவணங்களும் அவை பாதுகாக்கப்படும் அலுவலகங்களின் விபரம்

| வ. எண் | ஆவணத்தின்பெயர் | பாதுகாக்கப்படும் அலுவலகம் | பொது தகவல் அலுவலர் விபரம் | மேல் முறையீட்டு அலுவலர் விபரம் |
|---|---|---|---|---|
| 1. | அச்சிடப்பட்ட பழைய செட்டில்மெண்ட் ‘அ’ பதிவேடுகள் | மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) | மாவட்ட வருவாய் அலுவலர் |
| 2. | நில உடைமை பதிவு மேம்பாட்டுத்திட்டத்திற்கு முன் உள்ள புலப்படச்சுவடிகள் | உதவி இயக்குநர் நில அளவைப் பதிவேடுகள் துறை அலுவலகம் | தொழில் நுட்ப மேலாளர் (நிலஅளவை) | உதவி இயக்குநர் நில அளவை |
| 3. | கிராமப்படங்கள் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | தொழில் நுட்ப மேலாளர் (நில அளவை) | உதவி இயக்குநர் நில அளவை |
| 4. | நிலவரித்திட்ட அலுவலகத்தில் தயார் செய்யப்பட்ட சிட்டா மற்றும் அடங்கல் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) | மாவட்ட வருவாய் அலுவலர் |
| 5. | நிலவரித்திட்ட நிலப்பதிவேடு | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) | மாவட்ட வருவாய் அலுவலர் |
| 6. | நிலவரித்திட்ட அலுவலர் அலுவலக வழக்கு கோப்புகள் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) | மாவட்ட வருவாய் அலுவலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | நில உடைமை பதிவு மேம்பாட்டு திட்ட புலப்படச்சுவடி | வட்டாட்சியர் அலுவலகம் | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | வட்டாட்சியர் |
| 8. | நில உடைமை பதிவுமேம்பாட்டு திட்ட அ பதிவேடு | வட்டாட்சியர் அலுவலகம் | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | வட்டாட்சியர் |
| 9. | நில உடைமை பதிவு மேம்பாட்டு திட்ட சிட்டா | வட்டாட்சியர் அலுவலகம் | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | வட்டாட்சியர் |
| 10. | நில உடைமை பதிவு மேம்பாட்டு திட்ட மூல ஆவணங்கள் | மத்திய நில அளவை அலுவலகம், சென்னை | உதவி இயக்குநர் (வரைபடம்) மத்திய நில அளவை அலுவலகம் சென்னை | இணை இயக்குநர் மத்திய நில அளவை அலுவலகம் சென்னை |
| 11. | நத்தம் நில அளவை புலப்படச்சுவடி | வட்டாட்சியர் அலுவலகம் | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | வட்டாட்சியர் |
| 12. | நத்தம் நிலவரித்திட்ட சிட்டா | வட்டாட்சியர் அலுவலகம் | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | வட்டாட்சியர் |
| 13. | நத்தம் நிலவரித்திட்ட அடங்கல் | வட்டாட்சியர் அலுவலகம் | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | வட்டாட்சியர் |
| 14. | நத்தம் நில அளவை மூல ஆவணங்கள் | மத்திய நில அளவை அலுவலகம் சென்னை | உதவி இயக்குநர் (வரைபடம்) மத்திய நில அளவை அலுவலகம் சென்னை | இணை இயக்குநர் மத்திய நில அளவை அலுவலகம் சென்னை |
| 15. | வட்ட வரைபடங்கள் (விற்பனை பிரதிகள்) | உதவி இயக்குநர் நில அளவைப் பதிவேடுகள் துறை அலுவலகம் | தொழில் நுட்ப மேலாளர் | உதவி இயக்குநர் நில அளவை |
| 16. | மாவட்ட வரைபடம் (விற்பனை பிரதிகள்) | உதவி இயக்குநர் நில அளவைப் பதிவேடுகள் துறை அலுவலகம் | தொழில் நுட்ப மேலாளர் | உதவி இயக்குநர் நில அளவை |